# சிரித்திரன்

தை, மாசி விலை: ரூபா: 15




தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

செல்வம் ஆலையிலதான் எல்லாம். திரித்தல், தீட்டல், உடைத்தல் அரைத்தல் சகல வேலையும் அங்கதான். நல்ல வேலை என்றால் அது செல்வம்.



- தூள் திரித்தல்
- உழுந்து, பயறு திரித்தல்
- அரிசி இடித்தல்
- நெல் உடைத்தல்
- மாவு அரைத்தல்

உங்கள் வேலை நாடி சேவை செய்யக் காத்திருக்கின்ற

# செல்வம் அரைக்கும் ஆலை

யாழ். வீதி, - கிளிநொச்சி.

# சிரித்திரன்

செய்தொழிலே தெய்வம்
சிரிப்பே சிநேயம்

நகை 32 | தை - மாசி | சுவை 1

## முன்முறுவல்

ஒருவர் :- என்ன தெரிவுக்குழு வண்டி, முடிவை நோக்கி வெளிக்கிட்டுட்டுதாம். அப்ப முடிவு வரும் போல பிரச்சனைக்கு...

மற்றவர் :- வண்டி வெளிக்கிட்டது மெய். ஆனால் அவை போட்டிருக்கிறது ரிவர்ஸ் கியர் எல்லோ!

---

வேலு :- என்னுடைய மகளுக்கும் சீதைக்கும் ஒரு வித்தியாசம்.

மணியம் :- என்ன அது?

வேலு :- சீதை விரும்பாது இலங்கையில் சிறை வைக்கப்பட்டாள். என்ர மகள் விரும்பிப் போய் சிறையிருக்கிறாள் அந்நிய நாட்டில.

---

ஒருவர் :- பரீட்சைக் கடதாசிகள் கப்பலில் அலைகிறதாம்.

மற்றவர்:- காகிதக் கப்பல் விடுகினம் போல.

---

ஒருவர்:- மணமக்கள் ஊர்வலமாய் வருகினம் வாசல்ல நிறைகுடம் வையுங்கோ.

மற்றவர் :- வைக்கிறன். ஒரு தேங்காய் மட்டும் தந்திட்டுப்போங்கோ.

---

ஒருவர் :- கேற்றில் 'கடிநாயகி' கவனம் என்று எழுதித் தொங்கவிடலாமென்று பார்க்கிறன்.

மற்றவர் :- அப்ப எழுதித் தொங்கவிடன்.

ஒருவர் ;- மனைவிக்குப் பயமாயிருக்கு.

---

அரசன் :- மந்திரி! மாதம் மும்மாரி பொழிகிறதா?

மந்திரி:- ஆம் அரசே. தினமும் Bomb மாரிபொழிகிறது.

---

ராமு:- மகளின் கல்யாணப்பேச்சு என்ன ஆச்சு?

சோமு:- ஒரு தெரிவுக்குழுவை நியமித்திருக்கிறன். அதன் முடிவை எதிர்பார்க்கிறன்.

---

ஒருவர் :- கார்த்திகேசுவிற்கு மூளை பழுதாப் போச்சு.

மற்றவர் :- ஏன்?

ஒருவர் :- பிள்ளைகளுக்கு admission கேட்டு இல்லையெண்டு தெரிஞ்சதிலை மூளை பழுதாகி மனநோயாளர் பிரிவிலையும் இடமில்லாமப் போச்சு.

---

ஒருவர் :- என்ன தேய்ஞ்சுபோனீர்?

மற்றவர் :- பிள்ளைக்குப் பொருத்தமான மாப்பிள்ளையும், ரவிக்கைத் துணிக்குப் பொருத்தமான சாரியும் தேடியலையிறன்.

# குதித்து ஆடியவர்

''நாட்டில் வரி வசூலிக்க ஒரு நேர்மையான ஆளைக் கண்டு பிடிக்க வேண்டுமே, என்ன செய்யலாம்?'' என்று ஒரு அரசர் தன் மந்திரியைக் கேட்டார்.

அதற்கு மந்திரி, ''கவலைப்படாதீர்கள். இதுவரை இந்த வேலைக்கு யார் யார் மனுப் போட்டிருக்கிறார்களோ, அவர்களை அரண்மனைக்கு நாளைக்கு வரச்சொல்லுங்கள். நேர்மையான ஆளை நான் கண்டு பிடித்துக் கொடுக்கிறேன்'' என்று சொன்னார்.

அடுத்த நாள் காலையில் எல்லா மனுதாரர்களும் அரச சபையில் அரசன் முன்னால் கூடினர்.

மந்திரி அவர்களைப் பார்த்து, ''நீங்கள் எல்லோரும் நாட்டியம் ஆடுங்கள் யார் நன்றாக ஆடுகின்றீர்கள் என்று பார்க்க வேண்டும்'' என்று சொன்னார்.

ஒருவரைத் தவிர மற்ற எல்லோரும் ஆடாமல் பேசாமல் நின்றனர். ஒருவர் மட்டும் குதித்துக் குதித்து ஆடினார்.

''இப்பொழுது குதித்து, குதித்து ஆடிக் கொண்டிருக்கிறாரே, இவர்தான் நேர்மையான மனிதர். இவரைத்தான் நீங்கள் வேலைக்கு வைத்துக்கொள்ள வேண்டும்'' என்று சொன்னார் மந்திரி.

''எப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டார் அரசர்.

''இவர்கள் எல்லோரையும் நான் ஒரு இருட்டு அறையின் வழியாக இந்தச் சபைக்கு வரும்படி ஏற்பாடு செய்திருந்தேன். அந்த இருட்டு அறையில் திறந்த சாக்குகளில் நிறைய நாணயங்கள் வைத்திருந்தேன். நடனம் ஆட மறுத்தவர்களைச் சோதனை போடுங்கள், நாணயங்கள் கிடைக்கும். ஆடினால் இடுப்பிலிருந்து நாணயங்கள் கீழே விழுந்து தங்களைக் காட்டிக் கொடுத்து விடுமோ என்று பயந்துதான் இவர்கள் ஆடவில்லை'' என்றார் மந்திரி.

நன்றி:- சிறீராம ஜெயம்

# கிளாலி கடப்பது, மறுபிறப்பு!

காரிருட்டும் பேய்க்காற்றும்
கதிகலக்கும் பனிக்குளிரும்
ஆர்ப்பரித்து எழும் அலையும்
அச்சமூட்டும்! மிரளவைக்கும்!

''சேச்'' லைட்டும் சென்றிகளும்
வெகுதொலைவில் இருந்து கொண்டு...
வீச்சாய்வரும் எதிர்ப்படகை,
வெட்டுக்கொத்தை நினைவிலூட்டும்!

ஏறுமுன்னர் எம்சனங்கள்
எடுத்துரைத்த கொடுங்கதையும்
கூறு போட அவன் வருங்கால்
நடப்பவையும் நினைவில் விழும்!

ஊறிக்கடல் ''ஊத'' உடல்
உருக்குலைந்த சடலமாக
மாறும் நிலை வருமோ? என...
மனம் பதறும்! புலனொடுங்கும்!!

வான் வெள்ளித் திசைஉதவ
வழிதேடும் நம் கண்கள்
விண் வாழும் ''முழுத்தெய்வ...''
முகந்தேடி நேர்ந்து அழும்!

ஆலங்கேணிக் கரைதழுவும்
கணம் வரைக்கும், இது தொடர்ந்தே...
''காலன்'' தோற்கத் தரை மிதித்தால்,
அம்மா...!! அது மறுபிறப்பு.

- த. அன்பழகன்-

# கடலில் வடியும் வானமிர்தம்

## நிலைக் கண்ணாடி

வான நீர் காணாது வாடிய பயிரைப் பார்த்து விவசாயி வடிக்கும் கண்ணீர் ஆவியாகப் பெய்வதே எமது மழை. பறவை, மிருகம் தமது கவலையை ஒலிக் குறிப்புகளால் தெரிவிக்கும். தாவரங்களுக்கு ஒலிக்குறிப்பு இல்லை. தன் அசைவாலே கவலையைத் தெரிவிக்கின்றது. அது வாடிக் கவலையைத் தெரிவிக்கின்றது.

கவலை கவிந்து பெய்யும் மலை ஓடிக் கடலுள் வடிகின்றது. மழை வெள்ளத்துடன் மண்ணும் வாரடித்து ஓடிவிடுகின்றது. எமது ஜீவாமிர்தமான மழைநீர் சேமிக்கப்பட வேண்டும். எமது மாண்புமிக்க மண் காப்பாற்றப்பட வேண்டும்.

திராவிட நாகரிகம் வளர்ந்திருந்தபோது மேற்கு நாட்டு மக்கள் காட்டில் மிருகமாக அலைந்து திரிந்தார்கள். இந்து நதிப் பள்ளத் தாக்கில் மோகிஞ்சதாரோ, கரப்பா எனும் இடத்தில் நாகரிக வசதிகளுடன் வாழ்ந்தார்கள் நகர் நிர்மாணம் அவர்களுக்குத் தெரிந்த கலை. அவர்கள் எழுதப்படிக்கத் தெரிந்திருந்தார்கள். பிரதான வீதி, குறுக்குத்தெரு, அறையுடன் இணைந்த குளியலறை, வடிகால் எல்லாம் இருந்தது. மக்கள் தொகை பெருக்கெடுத்தது. எரிபொருள் ஏராளமாகத் தேவைப்பட்டது. மரங்களுக்கு மக்கள் கூற்றுவரானார்கள். வானம் பொய்த்தது. மண் பசுமை இழந்தது நகரை விட்டு மக்கள் வெளியேறினார்கள். இந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகம் அழிந்தது.

மரம் வெட்டுவோரைக் கண்டால் உடன் சுட வேண்டுமென அரசாங்கம் கட்டளை பிறப்பித்தது. கிழக்கு இலங்கையில் இன்று மாரிபொழிகின்றது. காட்டை வளர்ப்பதற்கல்ல; காட்டையழிப்பதற்கு குண்டுமாரி பொழிகின்றார்கள். ''மரங்கள் வெட்டும் படையணி ஒன்றை உருவாக்க வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்துள்ளார் ஒரு பாராளுமன்ற உறுப்பினர்.

பிறேசிலில் அன்று சுற்றாடல் பாதுகாப்பு மாநாடு நடைபெற்றது. உலகச் சுற்றாடல் பாதுகாக்கப்பட வேண்டும். உலகம் இரட்சிக்கப்பட வேண்டுமென உலக மக்களை வேண்டினார்கள். இந்த மாநாட்டை ஒரு கோமாளிகள் மாநாடு எனச் சிங்கள அரசாங்கம் முறுவல் பூத்திருக்கும்.

பௌத்த சிங்கள பேரினவாத வெப்பத்தினால் எமது விவசாய மண் பாலைவனமாக மாறிக் கொண்டிருக்கின்றது பனிநீர் எமது மண்ணை நனைக்கிறதே என்றும் புழுங்கினார்கள். மாறி மாறிப் பதவியேற்ற நீர்ப்பாசன மந்திரிகள் எமது தமிழ்ப் பிரதேசத்தை மாற்றான் மாநிலம் என மதித்தார்கள். எமது தமிழ்ப் பிரதிநிதிகள் சட்ட சபையில் கொண்டுவந்த நன்னீர்த் திட்டங்களை நிராகரித்தார்கள். விவசாயத்தை தம்முயிரிலும் மேலாக மதித்த மக்கள் வறண்ட வானத்தையும் துவண்ட பயிரையும் பார்த்துக் கண் கலங்கினர்.

முதன் முதல் மகாவலித்திட்டத்தைச் சட்ட சபையில் கொண்டுவந்தது தார்மீக இதயம் கொண்ட தமிழ்ப் பெருமகனே! மகாவலி நீர் பாய்ச்சி விவசாயம் செய்யலாமெனக் கூறியவர் 'ஒனரெபிள்' பாலசிங்கம் அவர்களே. பின்பு வந்த சிங்கள அரசியல் மேதாவிலாசங்கள்

மகாவலித் திட்டத்தைப் பற்றிப் பெரிதாகத் தம்பட்டமடித்தார்கள். இன்று மகாவலியும் அதன் சூழலும் செழுமையாகக் காட்சியளிக்கின்றது. இன்று தமிழீழ மண்ணில் பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் ஆபத்பாந்தவராய்த் தோன்றி அபயமளிக்கின்றது. வற்றிப்போயிருந்த கிணறுகள், பாசி படர்ந்த கேணிகள், கொப்பறாவாகக் காய்ந்த குளங்கள் எல்லாவற்றையும் ஆழமாக்கி அளப்பரிய தொண்டு செய்கின்றது.

இந்நிலையில் ஒரு கை மட்டும் தட்டினால் ஓசை வராது என்பதைச் சமூகப் பொறுப்புள்ள அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டும். குளங்களை மெல்லமெல்ல மூடிக் குடியிருப்புகளாக்குவது நிறுத்தப்படவேண்டும். அத்துடன் மழை நீரைக் கடலுக்குள் செல்லவிடாது கற்படுத்தப்பட்ட தடைகளை விறகுக்காகக் கொண்டு செல்வதும் நிறுத்தப்பட வேண்டும் அவ்வாறான தடுப்புக்கள் இன்று கொத்தி எரிக்கப்படுவது சர்வசாதாரணமாகிவிட்டது. அவை எரிந்து கொண்டிருக்கும்போது அதில் எதிர்காலப் பாலைவனம்தான் தெரிகிறது. கடல் நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்துமளவுக்கு எமது விஞ்ஞான ஆற்றலும் சக்தியும் வளர்ந்து விட்டதாகக் கருதி இவ்வாறான செயல்களில் யாராவது ஈடுபட்டிருந்தால் அவர்கள் அதனை நிறுத்திக் கொள்ளவேண்டும். மழைநீரைத் தேக்க முயற்சியெடுக்கும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரின் பணிகளுக்குக் கை கொடுத்து உதவவேண்டும்.

"எமது எதிர்காலம் ஒளி மிக்க எதிர்காலமாகட்டும்"


## சிரித்திரன் சிறுகதைப் போட்டி

## பரிசு ரூபா. 500

சிரித்திரன், சிறுகதைப் போட்டியொன்றை நடாத்தத் திட்டமிட்டுள்ளான். போர்க்காலச் சூழ்நிலையை மையமாக வைத்துக்கதைகள் எழுதப்படல் வேண்டும். பரிசிற்குரிய கதைகளைச் சிரித்திரன் தேர்வுக் குழுவே தேர்ந்தெடுக்கும்.

முதலாவது பரிசுபெறும் கதைக்கு ரூபா ஐந்நூறு (500/-) பரிசாகக் கிடைக்கும். அடுத்ததாகத் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று கதைகள் சிரித்திரனில் பிரசுரமாகும்.

உங்களது ஆக்கங்களை 31.03.93க்கு முன் எமக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அனுப்பவேண்டிய முகவரி:-

ஆசிரியர் சிரித்திரன்
550, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.





- செய்தித்தாள் விற்பனை நிலையம் :- ஓசி வாசகர் ஒன்றியம்
- பந்தி:- கறி விமர்சன மேடை.
- கந்தோர்:- சம்பழம் பறிக்கும் தோட்டம்.
- கைக்கடிகாரம்:- நேரங்காட்டும் ஆபரணம்.
- பசு:- குழந்தையின் செவிலித்தாய்.
- வியாபாரம்:- கடைக்காரனின் தராசுக் கண்கட்டு வித்தை.


குறுமணி

### குடி போதனை

கையில் ஐந்து சதம் இல்லை. திகைப்பு; தவிப்பு. அவரைக் கண்டான். உள்ளந் துள்ளியது. மதுபானக் கடைக்குள் நுழைந்தார். காத்திருந்தான். திரும்பி வந்தார். "என்னடாப்பா பிடரியெச் சொறியிறாய்?" — "இல்லை முதலாளி, ஒரு இருவது ரூபா தேள்வெப்படுகுது!" — "இப்ப என்னத்துக்கெடா உனக்குக் காசு? தந்தாக் குடிச்சுப்போட்டுப் போயிடுவாய்!...... போ......போ!"

— மையோன்

# மகுடி



## கேள்வி - பதில்கள்

ரி. மோகன் ஆயத்தடி, மட்டுவில் வடக்கு.

கே: மகுடியாரே!
தற்போதையபோர்க்காலச் சூழ்நிலையில் வீதி விளக்குகளைத் திருடுபவர் எப்படிப்பட்டவர்?

ப:- பாவம்...... வீட்டில் நல்வழி நூல் படிக்க விளக்கு இல்லை போலும்.

☆ இக்கேள்விக்குரிய பரிசு ரூபா ஐம்பதினை மில்க்வைற் அதிபர் கலாநிதி க. கனகராசா அவர்கள் வழங்குகிறார்.

செல்வி குமுதினி சாவகச்சேரி

☆ இளமரம் நாட்டி முதிர் மரம் தறிக்கச் சட்டம் வந்தாலென்ன?

☼ தறிகெட்டவர்க்கு சட்டம் எது? சந்ததி எது?

☆ உலகில் அவலட்சணமானது எது?

☼ அடிமையின் மேல் இருக்கும் ஆபரணம்.

தி. முரளி உடுப்பிட்டி

☆ உலகின் நிலைபற்றி கூறுங்கள்?

☼ உலகம் சதியால் எரிய U. N. O பிடில் வாசிக்கின்றது.

சி. பாலரத்னம் மல்லாகம்

☆ பணத்தால் எல்லாவற்றையும் சாதித்து விடலாம். உம் கருத்து.

☼ வேந்தனாக வர முடியும் உபவேந்தராக வரமுடியாது.

மு. பஸ்தியாம்பிள்ளை பாசையூர்

☆ எம். ஜி. ஆர் பற்றி உங்கள் கருத்து என்ன?

☼ மானுடத்தின் மகுடம்

கு. சுகந்தி குருநகர்

☆ இன்றைய சூழ்நிலையில் பெண்களிடம் சீதனம் வாங்கும் ஆண்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்?

☼ ஆண்மை பிட்சாபாத்திரம் ஏந்துகிறது.

அன்புஜீ கொட்டடி

☆ எமது மண்ணில் வளம் பெற என்ன செய்யவேண்டும்?

☼ பொலியே பொலி என்று சூடு மிதிக்க வேண்டும். பொங்கலோ பொங்கலென்று பொங்கவேண்டும்.

சுப்பிரமணியம், மலர்வதனா

☆ இளம் சந்ததியினரைப் போராட்டத்திலிருந்து பிரிப்பது எது?

☼ தேசிய உணர்வு இல்லாக் கல்வி.

சு. எமிஸ்ரன் பாசையூர்

☆ பதுக்கிப் பணம் ஒதுக்கும் குணம் படைத்த வியாபாரியைப் பற்றி?

☼ உண்மையை உரமாக்கி பண மரம் வளர்த்து காசுக் கனி பறிக்கும் சமூகச் சாத்தான்.

பா. நேசராஜா யாழ்ப்பாணம்

☆ வீடும் சீதனமாய்க் கேட்கிறார்களே! உமது கருத்து?

☼ வீடு பேறு.

த. தனம் அச்சுவேலி

☆ அன்பு போதிக்கும் ஆகமங்கள் இன்று துன்பியல் நாடகமாயிருக்கிறதே?

☼ எல்லோரும் தர்மத்தின்படி வாழத் தாமதம். ஆனால் மதத்திற்காக வாளெடுக்கச் சம்மதம்.

நன்விரும்பி சர்வதேசம்

☆ சமவுரிமைப் போரில் பெண்ணாதிக்கம் ஆண் உரிமையைப் பறிக்கிறதே?

☼ சீதனமும் வேணும், சிங்கார நாச்சியும் வேணும், அத்தோடு சமவுரிமையும் வேணு மாம் தம்பிக்கு.

வரதன் கற்பகம் உடுப்பிட்டி

☆ நீர் துன்பத்தை வரவேற்பீரா?

☼ வருக வருக என வரவேற்பேன். துன்பந் தான் என் ஞானகுரு.

அருளம்பலம் பளை

☆ இந்த உலகில் மதங்கள் பற்றி உங்கள் கருத்து?

☼ மதக் காழ்ப்புணர்வு கனன்று கொண்டிருக் கிறது.

மணியன் சித்தங்கேணி

☆ எவன் வெற்றி மனப்பான்மை உடையவன்?

☼ ''செம்பில் பால் அரைவாசி நிறைந்திருக் கிறது'' என்பவன் வெற்றி மனப்பான்மை உடையவன்; ''செம்பில் பால் அரைவாசி குறைந்திருக்கிறது'' என்பவன் தோல்வி மனப் பான்மையுடையவன்.

எஸ். கருணை புலோலி

☆ உலகின் மகா மந்திரம்......

☼ தலையணை மந்திரம் தரணியை ஆளும்!

மோகன் சித்தங்கேணி

★ 'இலங்கையில் எல்லாம் இலவசம்'—உங்கள் கருத்து?

☼ ''மீனைக் கொடுப்பதற்குப் பதில் தூண்டி லைக் கொடு'' என்று மா ஓ சேதுங் கூறுகி றார்.

மகுடியாரிடமிருந்து தங்கள் சந்தேகங் களைத் தீர்க்க விரும்புவோர் கேள்வி களை தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதி அனுப்பிவைக்கவேண்டிய முகவரி:-

மகுடி பதில்கள்,
சிரித்திரன்,
550, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## மகுடி முன் மொழிந்தவை

538:- ☆ இறந்த ஒரு கலைஞனுக்கு மணிமண்டபம் கட்டுவது பற்றி தங்கள் கருத்தென்ன?

☼ அவன் உயிரோடு இருக்கும்போது சமாதி கட்டாமல் இருந்தால் போதும்

549:- ☆ தமிழர் இருவர் ஆங்கிலத்தில் உரையாடுவதுபற்றி தங்கள் கருத்து?

☼ தாம் உடலால் கறுத்தவராயினும் உள்ளத்தால் வெள்ளையர் என்று காட்டுவதற்கு

552:- ☆ பெண்களைக் கண்டவுடன் சில ஆண்கள் பாட்டுப்பாட ஆரம்பித்து விடுகிறார்களே ஏன்?

☼ பாலுணர்வில் பா உணர்வு

556:- ☆ பத்திரிகையாசிரியரின் தொழில் எப்படிப்பட்டது?

☼ அன்னைக்குப் பிரசவத்தின்பின் இன்பம். ஆசிரியனுக்குப் பிரசுரத்தின் பின் இன்பம்.

576:- ☆ மனிதன் கடவுளை வணங்குவது பக்தியினாலா? பயத்தினாலா?

☼ பணத்தின் மேலுள்ள பக்தியினால். மரணத்தின் மேலுள்ள பயத்தினால்.

# மரத்தடி மகாராஜாக்கள்

## து. வைத்திலிங்கம்

'இவ்வளவு கஷ்டப்பட வேண்டுமென்று தெரிஞ்சிருந்தால் பேசாமல் யாழ்ப்பாணத்தில் நின்றிருக்கலாம்! சாய்......! ஒரு நிமிஷம் மனுசனை நிம்மதியாய் இருக்கவிடாமல் துரத்தி விட்டாளே......'

இருநூற்றி ஐம்பது மைல் தூரத்துக்கு அப்பால் இருக்கும் தன் மனைவியை ஆசைதீர மனதுக்குள் திட்டினார்.

ஊரில் துணிந்து செய்யமுடியாததொன்றை இங்கு செய்கின்றோம் என்று மனதுக்குள் குரூரத் திருப்தி.

ஒன்று வேறு!

முதல்நாள் கிளாலிப் பாதையால் மூன்று மணிநேரம் படகுப்பயணம். பின்னர் ஆலங்கேணி வயல் வரப்புகளில் இரண்டுதரம் தடக்கி வீழ்ந்து எழும்பி, தொடர்ந்து வவுனியாவரை கூண்டுப் பறவை போல் மினிபஸ் வண்டிப் பிரயாணம் செய்த உடல் அசதியும் நோவும் கனகசபையை மிகவும் வருத்தியது.

'இஞ்சை நான் படும்பாடு அவளுக்குத் தெரியப்போகுதே அவன்கள் எழுதிப்போட்டான்கள் எண்டு இவள் பாவி ஒற்றைக் காலிலை நிற்கிறாள்... !'

மனைவியின் 'பேச்சுத் தாங்காமல்தான் கடைசியில் இவ்வளவு கஷ்டப்பட்டுப் புறப்பட்டு வந்தார்.

''யாழ்ப்பாணத்தில் எடுத்த பிறப்புச் சான்றிதழ் இங்கு ஏற்றுக்கொள்ள முடியாது கொழும்புக் கச்சேரியில் போய் எடுத்துக்கொண்டு வாருங்கோ!'

— முகத்தில் அடித்தமாதிரிக் கூறி அனுப்பிவிட்டார்கள்.

கனகசபை பாஸ்போட் விண்ணப்பங்களுடன் வெளியே வந்தார்.

'எட எவ்வளவு பணம் செலவழிச்சு எடுத்த சேட்டிபிக்கேற்றை ஒரு நிமிஷத்திலை அது செல்லாது என்று சொல்லிவிட்டானே!'

அவர் தங்கியிருந்த கடைக்காரரின் தயவில் ஒரு ஆளைக் கூட்டிக்கொண்டு இன்று மனைவியின் பிறப்புச் சான்றிதழை எடுக்க வந்துள்ளார்.

''இதிலை நில்லுங்கோ இப்ப வாறன்! ஒரு ஆளை எனக்குத் தெரியும் போய்ப் பார்ப்பம்...''

அவர் சென்று பத்து நிமிஷத்தில் இன்னொருவருடன் திரும்பி வந்தார். பெரிய மீசையுடன் வெள்ளை வெளேரென்ற உடுப்பில் கம்பீரமாகத் தோற்றமளித்தார்.


'எட இவன் எங்கடை மணியகாரன் கந்தோரிலை முந்தி வேலைசெய்த பெடியன்போலை கிடக்குது...... அவன்தானோ இல்லாட்டி வேறை ஆளோ தெரியவில்லை......' தனக்குள் கனகசபை கூறிக்கொண்டார்.

**சிரித்திரு**

சீடன்: குருதேவா! கிளாலிச் சம்பவத்திற்குப் பிறகு எனக்கு வாழ்க்கை வெறுத்துப் போச்சு.

குருதேவர்-: அப்பனே! பிறவிக்கடல் தாண்ட எத்தனையோ கிளாலிக் கடல்கள் தாண்ட வேண்டும்.

"நீ அந்நிய நாடு போகவில்லையே."
"எனக்கு ஊர் அரிசிச் சோறில்லாமல் இருக்கேலாது."




நவதானியப்
பொருட்கள்
உள்ளூர் உற்பத்தி

விற்பனை

கொள்வனவு

கொமிசன் ஏஜென்சி.

உருளைக் கிழங்கு

மற்றும்

சுதேசியங்களின் சந்தை

# காங்கேஸ்வரன் ஸ்ரோர்ஸ்

யாழ் வீதி,
கிளிநொச்சி.

''பெரியவர் இஞ்சை வாருங்கோ!''

வந்த புதியவர் கூறினார். கட்டிடத்தின் பின்பக்கம் ஓங்கி வளர்ந்து நின்ற அரச மரத்தடியில் போய் நின்றார்.

''இவர் எல்லாம் விபரமாய்ச் சொல்லியிருக்கிறார். இப்ப இஞ்சை பிறப்புச் சேட்டிபிக்கற் எடுக்கிறதெண்டால் பெரிய கஷ்டம்! ஒரு மாதிரி தெண்டித்துப் பார்ப்பம்!''

''தம்பி உங்களை எங்கையோ கண்டமாதிரிக் கிடக்கு! நீங்கள் எங்கை வேலை செய்தனீங்கள்?'' கனகசபை ஆவலுடன் கேட்டார்.

''பெரியவர், அந்த விசாரணையை விடுங்கோ! இப்ப உங்கடை அலுவலைக் கதையுங்கோ! சேட்டிபிக்கற் எடுத்துத் தாற வேலை என்னுடைய பொறுப்பு!''

ஆனால் அவர்கள் சும்மா செய்யமாட்டினம்!
கொஞ்சக் காசு செலவு வரும்!
வந்தவரின் பேச்சில் ஒருகறுர்!
''அது சரி தம்பி எவ்வளவு வரும்?''
''கனக்க ஒன்றுமில்லை. ஆயிரம் ரூபாய் தாருங்கோ!''
''ஆயிரமோ ?''
கனகசபை வாயைப் பிழந்தார்.
''கொஞ்சம் குறைக்சப் பாருங்கோ...!''

''பெரியவர், இது ஆடு மாடு வியாபாரம் இல்லைப் பாருங்கோ! எனக்கு உங்களுடன் மினக்கட முடியாது ஆயிரம் ரூபாய் தாறதெண்டால் அப்பிளிக்கேசனைத் தாருங்கோ!''

கையை நீட்டினார்.

கனகசபைக்கு வயிற்றில் ஏதோ செய்ய அவர் சங்கடப்பட்டார். அவர் பேச்சற்று நிற்பதைக் கண்டதும் புதியவர் இவரை நோக்கிச் சிரித்தார்.

''ஐயா, இதுக்கு யோசித்தால் இப்படியே நிற்க வேண்டியதுதான். யோசித்துச் சொல்லுங்கோ! நான் இப்ப கொஞ்ச நேரத்திலை வாறன்!''

அவர் போய் விட்டார்.

''அங்கையும் காசு... இஞ்சையும் அதே கதைதான்.. ... இவன்கள் ஆளை ஆள் மிஞ்சுவான்கள் போலைகிடக்கு!'' யாழ்ப்பாணத்தில் தான்பட்ட அனுபவங்களை எண்ணிக் கனகசபையின் சிந்தனை ஓடியது.

கனகசபை மிகவும் களைத்து விட்டார் மூளாயிலிருந்து காலை ஆறு மணிக்குச் சயிக்கிலில் புறப்பட்டவர், எதிர் காற்றுக்கும், வீதிகளை இலையான் மாதிரி மொய்த்துக் கொண்டு உலாவும் சயிக்கில் வண்டிகளுக்கும் சவால் விட்டவாறே ஒரு மாதிரி கச்சேரிக்கு வந்து சேர்ந்து விட்டார்.

''அறுபத்தி ஏழு வயதிலும் மனுசன் சயிக்கில் ஓடமுடியுமே! வீட்டை நிம்மதியாய் இருக்க விட்டால்தானே! போய்ப் பார்த்துக் கொண்டு வாருங்கோ எண்டு பிடரியிலை வைச்சுத் தள்ளாதகுறை..''

முணுமுணுத்துக் கொண்டே சயிக்கிலை கச்சேரி வளவுக்குள் விட்டார்.

''ஐயா, ஐயா! நில்லுங்கோ! சயிக்கிலை அங்கை கொண்டு போகவேண்டாம்! இதாலை கொண்டு போய் விடுங்கோ!'' கூறிக் கொண்டே கிழக்குத்திக்கை நோக்கிக் கையை நீட்டினான். அத்துடன் இலக்கம் பொறித்த சிறு மட்டையையும் நீட்டினான்.

''ஏன் மோனை முந்தி அந்தப் பக்கம்தானே நாங்கள் கொண்டு போய் விட்டனாங்கள். இதென்ன புது ஏற்பாடு?''

''அதெல்லாம் பழைய ஏற்பாடுதான். நீங்கள் கொண்டு போய் விடுங்கோ. திரும்பிப் போகைக்குள்ளை மட்டையைக் காட்டினால்தான் சயிக்கில் கொண்டு போகலாம்!''

அவனுடைய பதிலில் சற்று அலுப்பு இருக்காதா?

காவலாளி வழமையாக அவனுக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் உள்ள சிறு மேசைக்குப் பக்கத்தில் கதிரையில் அமர்ந்தவாறே தன் கடமையைச் செய்தவன் ஒவ்வொரு சயிக்கில் உள்ளுக்கு வரவும் அவன் எடுத்து அலுவலர்களது சயிக்கில்களை ஒரு பக்கமாகவும் பொது

அடுத்த இதழில்......
ஜோசப் பாலா எழுதிய
''மகிழ்வின் மறுபக்கம்''
சிறுகதை

## என்ன புன்னகையோட வாறாய்?

## அது விக்கினேஸ்வரன் ஜுவலறி தங்கநகைபோட்டிருக்கிறன்



உங்களின் அங்கங்களின்
அழகுக்கு
தங்க நகைகளினால்
மெருகூட்ட

தரமான
22 கரட் இல் உருவான
விக்கினேஸ்வரன் ஜுவலறியின்
தங்க நகைகளையே
அணிவீர்.

நம்பகரமான, நாணயமான
ஓடருக்குச் செய்து கொடுக்கும்
தங்க நகை ஸ்தாபனம்.

# விக்கினேஸ்வரன் ஜுவலறி

யாழ். வீதி,
கிளிநொச்சி.

மக்களின் சயிக்கில்களைப் பிறிதொரு பக்கமாக வும் வழி கூறி அனுப்பவேண்டியுள்ளதே!

களவு இப்பொழுது அதிகமாக, வேலைப் பழுவும் கூடி விட்டது. கச்சேரிக்குள் இந்த மாதம் இதுவரை நாலு சயிக்கில்கள் களவு போய் விட்டன.

கனகசபைக்கு இதெல்லாம் தெரிய நியாய மில்லைத்தானே.

பிறப்புச் சான்றிதழ் விண்ணப்பங்கள் ஒப்படைக்கும் இடத்தில் உள்ள யன்னலுக் கருகில் இருவர் நின்றனர். அலுவலர்கள் உள்ளே இருந்தனர். ஆனால் யன்னல் திற படவில்லை. முன் விறாந்தையில் நின்று பார்த்துவிட்டு வெளியே வந்து, ஓங்கி வளர்ந்து வீதிக்குக் குடைபிடித்துக் கொண்டிருந்த மலை வேம்பு மரத்தின் கீழ் நின்றார்.

பதினாறு மைல் தூரம் சயிக்கில் ஓடி வந்தது பெரும் களைப்பாக இருந்ததால் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள எண்ணி, நாஷனல் சட்டையின் ஒரு பக்கத்துப் பையைத் துருத்திக் கொண்டிருந்த புகையிலையை எடுத்து அளவாகக் கிள்ளி, சுருட்டி பற்ற வைத்து இழுத்தார். மனதுக்கு இதமாக இருந்தது.

''என்ன பெரியவர் யோசனை ....?'' குரல் கேட்டுத் திரும்பினார்.

வாய்நிறைய வெற்றிலையுடன் ஒருவர் நின்றார்

''நீங்கள் ஆர் தம்பி? எனக்கு விளங்க வில்லை ...'' ''நான் இஞ்சைதான் வேலை செய் கிறன். நீங்கள் ஏதாவது சேட்டிபிகேற் எடுக்க நிற்கிறியள், போலை கிடக்கு ...... அது தான் கேட்டனான்''

கனகசபைக்குச் சுருட்டின் சுவையை விட இப்பேச்சு மிகவும் இதமாக இருந்தது. ''ஓம் தம்பி! பாஸ்போட் எடுக்கவேணும்.

என்ரையும் என்னுடைய மனுசிக்காறியின்ரை யும் பிறப்பு சேட்டிபிகேற் எடுக்க வேணும். இது இல்லாமல் பாஸ்போட் எடுக்க முடியாது. இவை இப்ப திறக்கமாட்டினம் போலைகிடக்கு!''

''நீங்கள் அப்பிளிக்கேசன் போட்டனீங் களோ?''

வந்தவரின் பேச்சில் ஒரு பெரிய கரிசனம் தெரிந்தது.

''இல்லைத் தம்பி! இனித்தான் எடுக்க வேணும்!''

''ஐயா, இஞ்சை அப்பிளிக்கேசன் போம் முடிஞ்சு போச்சு. இனி அடுத்த கப்பல் வந் தால்தான் வருமாம். என்ன செய்யப் போறீங் கள்''

''போம் இல்லையோ? அப்ப என்ன செய்வம்?''

''ஒண்டுக்கும் யோசிக்காதேயுங்கோ! எல் லாம் வெல்லலாம்! உள்ளுக்குள்ளாலை எடுக்க லாம். கொஞ்சக் காசு செலவழியும். அவ்வளவு தான்''

''எவ்வளவு தம்பி கேட்பினம்?''

''மெல்லப் பேசுங்கோ ஐயா! உது எல்லா ருக்கும் கொடுக்கமாட்டினம். ஒரு மாதிரிக் கேட்டுப்பார்ப்பம் இப்ப ஒரு இருபத்திஐஞ்சு ரூபாய் எடுங்கோ செலவுக்கு. எல்லாம் நான் ஒழுங்காக்கித்தாறன்!''

இரண்டு பத்து ரூபாய் தாள்களும் ஒரு ஐந்து ரூபாய் நாணயமும் கைமாறின.

'இரண்டு கிழமைத் தவணை எண்டு சொன் னான். ஒரு மறுமொழியையும் காணவில்லை?'' அங்கலாய்த்துக் கொண்டார் கனகசபை. கச்சேரிக்கு இத்துடன் மூன்றுமுறை சயிக்கில் ஓடி வந்து திரும்பி விட்டார்.

—சிரித்திரு—

## உத்தம புத்திரன்

மகன்:- அப்பா!

தந்தை:- மகனே!

மகன்:- எங்க அரசாங்கம் நல்லதல்லவா.

தந்தை:- ஏன் மகனே?

மகன்:- எல்லாம் மக்களுக்கு இலவசமாகக் கொடுத்து இதயத்தைக் கவர்ந்து விட்டதல்லவா?

தந்தை:- ஆம் மகனே!

மகன்:- அப்போ எங்களுக்கு 'சேர்ட்டிபிக்கட் டும் இலவசமாகத் தந்து உதவினால் என்னப்பா?

தந்தை:- ???

—ஜோக்கிரட்டீஸ்—

# சாறி எம்போறியம்

ஒரு சேலைகளின் சோலை.



**இச்சோலையில்?**

வசந்த காலச் சிட்டுகளுக்கு

நீலவானின்

ஜாலவர்ணங்களில் வண்ணப்பட்டுகள்

காஞ்சிபூரப்பட்டு மற்றும்

ரெடிமேட் புடவை வகைகளுக்கு

**நீங்கள் பாடிப்பறந்து**

**தேடி வரவேண்டிய**

**தென்றல் வீசிடும் சேலைச் சோலை.**

## சாறி எம்போறியம்

யாழ் வீதி, கிளிநொச்சி.

'அவன்கள் அங்கை குசாலாய் இருந்து கொண்டு எழுதிப் போட்டான்கள் இந்தச் சேட்டிபிகேற் வந்து பாஸ்போட் எடுத்து .....

இனி என்னென்ன செலவு காத்திருக்குதோ கடவுளுக்குத்தான் வெளிச்சம்!
கனடாவில் உள்ள அவரது மகன்மார் இருவர் மாறி மாறி எழுதிப்போட்டார்கள்,

''நீங்கள் பாஸ்போட் எல்லாம் எடுத்து றெடியாய் இருங்கோ. நாங்கள் இஞ்சை ஸ்பொன்சர் எல்லாம் ஆயத்தப்படுத்துகிறோம்''

கடிதத்தைக் கண்ட நேரம் முதல் ராசம்மா ஓரே நச்சரிப்புத்தான்.

''பாஸ்போட் எடுக்கிற ஒழுங்குகளைப் பாருங்கோவன் அப்பா! மற்ற ஆம்பிளையள் எண்டால் என்ன மாதிரி அவையை இவையைப் பிடிச்சுக் காரியங்களைக் கெட்டித்தனமாய்ப் பார்க்கினம்! நீங்களும் இருக்கிறியள்......!

''அங்கைபோய் என்னத்தை வெட்டுப் புடுங் கப்போறாய்? அவன்கள் எங்களை வீட்டுக்குளை விட்டுப் போட்டு மனுசிமாரோடை வேலைக்குப் போய் விடுவான்கள்! அந்தக் குளிரிலை நாங்கள் கிடந்து சாகவேணும்! ''

''உங்களுக்குத்தான் ஒரு கண்டறியாத குளிர்...... அந்தப் பிள்ளையள் இவ்வளவு காசையும் செலவளிச்சு ஆசையாய்க் கூப்பிடப் பார்க்குதுகள்......''

மனைவியின் நச்சரிப்புத் தாங்காமல் வயதையும் பாராமல் ஓடித்திரியவேண்டிய பரிதாபத்தை எண்ணி அலுத்துக் கொண்டார்.

முதலில் விண்ணப்பத்துக்குப் பணம்! பின்னர் சான்றிதழ் எழுதப்படும் பத்திரம் முடிந்து விட்டதென்றும் உள்ளுக்குள் 'வேலை' செய்து எடுக்க வேணுமென்று கூறி அதற்கு ஒரு கனிசமான தொகை!

பணம் கையை விட்டு வேகமாகச் சென்றடைந்தது. அவருடைய சான்றிதழ் கிடைத்தது. இராசம்மாவின் பதிவு பழுதாகிவிட்டதென்றும் மறுமொழி கிடைத்தது.

அவருக்குப் புரியவில்லை.

''ஐயா பயப்படவேண்டாம்! எல்லாவற்றுக்கும் நான் இருக்கிறன். எடுங்கோ ஐந்நூறு ரூபாய்! நாளைக்குப் பின்னேரம் உங்கடை மனுசிக்காறியின்ரை சேட்டிபிக்கற் கையிலை தாறன்!''

வெற்றிலைக்காரர் அபய கரம் நீட்டினார். அடுத்தநாள் கனகசபை கொடுத்த ஐந்நூறு ரூபாயைத் தன்னுள் அடக்கிக் கொண்ட பிறப்புச் சான்றிதழ் ஒன்று அவரின் கைகளில் திணிக்கப்பட்டது.

'உண்மையிலை நீ ஒரு மகாராசன்தான்!' கனகசபை நெஞ்சார அந்த ஆளைப் பாராட்டினார்.

''என்ன பெரியவர்! ரெடியே ......?''
கேட்டுக்கொண்டே வந்தார் மீசைக்காரர்.
கனகசபையின் சிந்தனை கலைந்தது.

''வேறென்னத்தைச் செய்யுறது''
முணுமுணுத்துக் கொண்டே சட்டைப் பையில் சுருட்டி வைத்திருந்த என்வலப்பில் இருந்த ஆயிரம் ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினார்.

வெகு அலட்சியமாக அதை வேண்டிக் கொண்டார் மீசைக்காரர்.

''நாளைக்குக் காலை பத்து மணிக்கு இதிலை வந்து நில்லுங்கோ! கையிலை சேட்டிபிகேற் தாறன்!''

அவர் போய் விட்டார்.
கனகசபை இதயச் சுமையுடன் கடைக்குத் திரும்புகிறார். ❋

நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

**சிந்தித்திரு**

எருது:- மனித உணர்வா மிருக உணர்வா மேலானது?

பசு:- மிருக உணர்வு


எருது:- ஏன்?

பசு:- பெண் தாய்ப்பாலைப் பிள்ளைக்குக் கொடாமல் பதுக்குகிறாள். மிருகங்கள் தாய்ப்பாலைப் பதுக்குவதில்லையே.

— ஜோக்கிரட்டீஸ்




# சுவை மீட்டல்





# தலைவர்கள்

வளவை வளவன்

நீண்டகால இடைவெளிகளின் பின்னர் அவர்களுக்கிடையில் நடைபெற்ற சந்திப்பு அது. உலகளாவிய சமாதானத்தைக் கட்டி எழுப்புதல் என்ற மாநாட்டு நிகழ்வின் பின் அவர்கள் பேசிக்கொண்டிருந்தனர்.

''முன்னைய தலைவர்கள் கோடிக்கணக்கில் பணத்தைக் கொட்டிப் போர்விமானங்கள், ஆயுதங்கள், போர்த் தளபாடங்களையெல்லாம் வாங்கிக் குவித்திருந்தார்கள். அவையெல்லாம் சும்மா கிடந்து வீணாகிப் போகின்றதே அதனால் அவற்றை நான் பயன்படுத்துகிறேன். மேலும் போரைப் போரால்தான் அழித்துவிட முடியும் அதற்காகவே இந்தப்போர்....'' என்று போரைத் தேசத்திலிருந்து ஒழித்துவிடுவதாகச் சபதமெடுத்த தலைவர் திருவாய் மலர்ந்தார்.

மற்றவர் விடுவதாக இல்லை. ''உங்கள் 2000ம் ஆண்டில் சகலர்க்கும் வீடு என்ற திட்டம் என்ன ஆச்சு'' என்று தொடர்ந்தார்.

''நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறேன். எல்லோர்க்கும் ஒரே மாதிரி வீடுகளை சமதர்ம அடிப்படையில் அமைப்பதற்காக, மாடிகளையும், உயர்ந்த பெரிய வீடுகளையும் தகர்த்துக் கொண்டிருக்கிறோம்''.

''அப்படியா? உங்கள் நாட்டில் விதம்விதமான வெடிகுண்டுகள், பீப்பாக்குண்டு, மலக்குண்டு என்று தயாரிக்கப்படுவதாகப் பத்திரிகைகளில் படித்தேனே''.

''ஆமாம்...மூலப் பொருட்களைப் பயன்படுத்தி அபிவிருத்தியில் தன்னிறைவு காண முயல்கிறோம்''.

இரண்டு நாடுகளின் ஆட்சித் தலைவர்கள் ஒரு விருந்தின்போது சந்தித்துக் கொண்டார்கள்.

பசுமையான பழைய நினைவுகளில் ஒரு கணம் மூழ்கி எழுந்தனர். அந்த நாட்கள் இனியன.

''போர் என்பதையே என் தேசத்தை விட்டு ஒழித்து விடுவேன்''

''இயன்றவரை தேவை கருதிய சேவையை என்நாட்டில் செய்யமுயலுவேன்''

ஐரோப்பிய நாடொன்றில் மேற்படிப்புப் படித்து வெளியேறும் போது எடுத்துக்கொண்ட லட்சியச் சபதங்கள் இவை.

எல்லாம் எழுந்து நின்று கடல் மீதாடும் அலைகளென ஆடிக்களித்தன.

ஒருவரை ஒருவர் தழுவிப் பிரிந்து உரையாடத் தொடங்கினர்.

''உலகின் சகல வானொலிகளும் உங்கள் நாட்டின் அழிவுகளையும், போரைப்பற்றியுமே உரத்துச் சொல்கிறதே'' என்று, தேவைகருதிய சேவை செய்யச் சபதமெடுத்த தலைவர் வினவினார்.

பலமான ஒரு வீரச்சிரிப்பை உதிர்த்துவிட்டு ''எமது நாட்டில் எல்லாமே நடப்பதால் வானொலிகள், தொலைத் தொடர்புச் சாதனங்கள், பத்திரிகைகள் என்று எம்மைப்பற்றிய செய்திகள் அடிபடுகின்றவே ஆனால் உமது நாடு இருப்பதாகவே தெரியவில்லையே''

''அதுவா......எமது நாட்டில் அமைதி தவழ்கிறது. மக்கள் நிம்மதியாக இருக்கிறார்கள்: அதனால் செய்தி உலகிலும் எமது நாடு அமைதியாகி விட்டது''.

---



Mr & Mrs டாமோடிரன்

Mrs. டா:- டார்லிங்!

Mr. டா:- யேஸ் டார்லிங்.

Mrs. டா:- தை Born பண்ணினா வலி பிறக்குமாம்.

Mr. டா:- யேஸ் டார்லிங். இப்போ கிலாலி வலி. இனி பூநரி வலி பிறக்கப் போகுது போல இருக்கு.

இதால போகேக்க இந்தக் கஜமுகன் பலசின்ரை ஞாபகம் வந்திட்டு. அதுதான் குதிச்சிட்டன். பறக்கேக்க கூட மறக்கேல்ல பாத்தியளோ?



அலங்காரப்பொருட்களின்
விளையாட்டுப் பொருட்களின்
விற்பனை ஸ்தாபனம்.


சாய்ப்புச் சாமான்களை
சிறந்த தரத்தில்
உயர்ந்த தரத்தில்
நீங்கள்
தேடி நாடி வரவேண்டிய
அலங்காரங்களின் அங்கம்

# கஜமுகன் பன்சி பலஸ்

யாழ். வீதி, கிளிநொச்சி.

---

என்ன சுவீப் விழுந்தமாதிரி நெஞ்ச நிமிர்த்துறீர்?
சிவா ரேடிங் கொம்பனியில் சாமான் வாங்கினா சுவீப் விழுந்தமாதிரித்தானே? அவ்வளவு மலிவு.



சாய்ப்புச் சாமான்கள்
பல விதமான, பல தரமான
விலை மலிவான
பலசரக்கு மற்றும்
பன்சி வகைகளுக்கு,

# சிவா ரேடிங் கொம்பனி.

யாழ் வீதி,
கிளிநொச்சி.

நீண்ட மௌனத்தின் பின் போரை இல்லா தொழிக்கச் சபதமெடுத்தவர் மெதுவாகக் கேட்டார். ''அமைதியாக இருப்பதெப்படி''

''அது மிக மிகக் கஷ்டமானது. சத்தியத்தை வார்த்தை ஆக்கிக் கொள்ளவேண்டும். அன்பை பண்ணாக இசைக்க வேண்டும்.....'' இப்படி அவர் அடுக்கிக் கொண்டே போனார்.

''உங்கள் பாதை மிகவும் கரடுமுரடானது எமது பாதை மிகவும் இலகுவானது. அதனால் உங்கள் பாதைக்கு வருவது எமக்குச் சரிவராது''

பாவம் தேவை கருதிய சேவைக்காகச் சபதமெடுத்தவர் தனது மௌனத்தைக் கலைக் காமலே பிரிந்து சென்றார்.

போரைப் போரால் வென்று போரை ஒழிப் பேன் என்று போரை இல்லாதொழிக்கச் சபத மெடுத்தவர் சத்தமாகச் சொன்ன - அந்த வார்த் தைகள் கேட்பதற்கு ஆட்களின்றித் திரும்பி அவர் காதுகளிற்குள்ளேயே பலமாகக் கேட்டுக் கொண் டிருந்தது.

# செய்தி சொன்னதும் பல்லி சொன்னதும்...

△ வாங்கி நான்கு நாட்களில் பழுதடைந்த விமானங்கள்.

—செய்தி—

உல்லாசப் பிரயாணிகளின் சொர்க்கமென்று போற்றப்படும் நாட்டைப் பழைய இரும்புகள் போடும் பஞ்சிகாவத்தை என நினைக்கிறார்கள்.

△ சிறீமா குடும்பப் பிணக்கு சமரசம் வேண்டும்

—செய்தி—

மகனைத் தாய்மையுணர்வோடு அணுகாத தாய் எப்படித் தமிழர் பிரச்சினையை அணுகப்போகிறாவோ தெரியாது.

△ அரச சுற்று நிருபங்களில் தமிழ் புறக்கணிப்பு.

—செய்தி—

சோல்பரி பிரபு தமிழினத்தைச் சிங்களவரிடம் தாரை வார்த்துச் சென்றார். தமிழ் மொழியில் சிங்களவர்கள் 'தாரை' வார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.


தொழில் நுட்ப வேலைகட்கு
வெள்ளிக் கிண்ணம் பரிசு!



மெக்கானிக் லேத்

ஓட்டு வேலைகட்கு

செல்லப்பா என்ஜினியரிங்

யாழ். வீதி, கிளிநொச்சி.

# வாசினைத் திரவியம்

''ஒரு ஐந்து பைசா போடுங்கய்யா!''

''காசு இல்லே போப்பா!''

''சாப்பிட எதனாச்சும் குடுங்களேன்!''

''ஒண்ணுமில்லைன்னா போகமாட்டே!...''

''போட்டுக்க எதனாச்சும் துணி குடுங்களேன்!''

''அட, வழியை விடப்பா! எங்கிட்ட ஒண்ணும் இல்லை''.

''பின்னே வாங்க, ரெண்டு பேரும் சேர்ந்து 'பிச்சை எடுப்போம்!''

— கல்லிடை கைலாசம்
(இதயம் பேசுகிறது)

ஒரு விஞ்ஞானி தவளை ஒன்றை வைத்து ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார் - முதலில் ''ஜம்ப்'' என்றார். நியாயமான தூரத்திற்கு அது பாய்ந்தது. பிறகு ஒரு காலை வெட்டி விட்டு ''ஜம்ப்'' என்றார். முதலிலும் குறைவான தூரத்திற்குப் பாய்ந்தது. இரண்டாவது காலையும் வெட்டிவிட்டு ''ஜம்ப்'' என்றார். அதனிலும் குறைவான தூரத்திற்குப் பாய்ந்தது. மூன்றாவது காலையும் வெட்டிய பிறகு இன்னும் குறைவாய். கடைசியில் நான்காவது காலையும் வெட்டிவிட்டு உத்தரவிட அது பாயவேயில்லை. உடனே விஞ்ஞானி தனது ஆய்வுக் குறிப்பில் பின்வருமாறு எழுதினார்: ''தவளைக்கு நான்கு கால்களையும் வெட்டிவிட்டால் காது கேட்காது!''

— (குமுதம்)


பாடசாலைப் புத்தகங்கள்.
பொழுதுபோக்கு துப்பறியும் புத்தகங்கள்.
பாடசாலை உபகரணங்கள்.
இலக்கிய சஞ்சிகைகள்

பெற்றுக்கொள்ள

நாடவேண்டிய ஸ்தாபனம்




பிக்பெ(B)ன்ஸ்

புத்தகசாலை.

யாழ்வீதி. கிளிநொச்சி.

# இசையும் நடிப்பும் இசைந்த சாந்தன்....

விடுதலைப் பாடல்களையும் வேறு பல மெல்லிசைப் பாடல்களையும் பாடி ரசிகர்கள் உள்ளங்களில் மன்னனாய் நடை போடும் சாந்தன் அண்மையில் அரிச்சந்திர மன்னனாய்ப் பாடி நடித்து மேடையில் வெற்றிநடை போட்டுள்ளார்.

அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடக சபா இந்த நாடகத்தைச் சில தினங்களுக்கு முன் மேடையேற்றியது. சாந்தனுக்கு இந்த நாடகமே முதல் அனுபவம். அவர் அரிச்சந்திரனாக நடித்ததில் ரசிகர்களுக்குக் கண்ணீர் வந்ததே தவிர இந்த எண்ணம் வரவேயில்லை.

நமது பாரம்பரியம் மிக்க மக்கள் கலையாகிய இசை நாடகத்தைச் சேர்ந்த அரிச்சந்திரா நாடகத்தில் அரிச்சந்திரன் பாத்திரத்தில் இந்தியக்கலைஞரும் நம்நாட்டுக் கலைஞரும் தத்தமக்குரிய பாணியில் சிறப்பாகப் பாடி நடித்திருக்கிறார்கள். நம் மண்ணில் பிறந்த ஒப்பற்ற கலைஞர் நடிகமணி வி. வி. வைரமுத்து நாம் வாழுகின்ற இக்காலத்திலேயே அரிச்சந்திரனாக நடித்து மறக்கமுடியாத இடத்தை ரசிகர்களின் உள்ளங்களில் பதித்துவிட்டு மறைந்துள்ளார்.

அக்கலைஞரின் பிரிவுக்குப்பின் யார் அரிச்சந்திரன் பாத்திரத்தை ஏற்று நடிக்கப்போகிறார்கள்; அந்த நாடகத்தை இனி யார் நடத்தப் போகிறார்கள் என்ற கேள்விகள் ரசிகர்களின் உள்ளங்களில் இருந்து வந்தன.

அந்த நாடகம் நடக்கப்போகிறது; பாடகர் சாந்தன் அரிச்சந்திரனாக நடிக்கப்போகிறார் என்ற ஏற்பாடுகளை அறிந்து ரசிகர்கள் அரிச்சந்திரன் நடிப்பு எப்படி இருக்கப்போகிறது என்ற ஆவலுடன் நாடகத்திற்குச் சென்றிருந்தார்கள்.

சாந்தன் மேடையில் அரிச்சந்திரனாகி ரசிகர்களை மெய்சிலிர்க்க வைத்துவிட்டார். அவரின் உரையாடல், நடிப்பு, பாட்டு அவருள் மறைந்

கிளிநொச்சியில் மிகப் பிரபலமான ஸ்தாபனம்.



சிலோன் டுபாக்கோ கொம்பனி
விநியோகஸ்தர்கள்
மலிபன் பிஸ்கட்
விற்பனையாளர்கள்
மொத்த விற்பனை
முருகன் ஸ்ரோர்ஸ்
யாழ் வீதி, கிளிநொச்சி.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



"அரிச்சந்திர மயான காண்டம்" நாடகத்தில் அரிச்சந்திரனாகச் சாந்தனும் சந்திரமதியாகச் செல்வரட்ணமும்.

திருந்த தனித்துவமான திறமையின் வெளிப்பாடாக அவரது பாணியாகத் திகழ்ந்தது. காலப்போக்கில் அவரது நடிப்பு அனுபவ மெருகடைந்து மிக உச்சநிலையில் திகழும் என்பது நிச்சயம்.

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தடவைகள் வைரமுத்துவோடு சந்திரமதியாக நடித்த சோக சோபித சொர்ண கவிக்குயில் வி.கே. இரத்தினம் இந்நாடகத்தை நெறிப்படுத்தி நாடக உலகிற்கு ஒரு அரிச்சந்திரனைத் தந்ததோடு அரிச்சந்திரா நாடகம் தொடர்ந்து நடைபெற வழிவகுத்துள்ளார்.

திரு. இரத்தினம் நடிப்பிலிருந்து ஓய்வு பெற்றபின் வைரமுத்துவோடு சந்திரமதியாகப் பல மேடைகளில் நடித்த நடிகர் செல்வரத்தினம் சாந்தனோடு சந்திரமதியாக அனுபவ மெருகேறிய தனது இயல்பான நடிப்பினாலும், உணர்ச்சி பாவமுடைய பாட்டுக்களாலும் வழமை போல் ரசிகர்களின் உள்ளங்களைக் கவர்ந்தார்.

இந்நாடகத்தில் சத்தியகீர்த்தி, விசுவாமித்திரர் உட்படச் சிலர் புதுமுகங்கள். அவர்களும் பாத்திரங்களை உணர்ந்து நடித்துள்ளார்கள்.

வழக்கமாக உள்ள பாட்டுக்களை விடக் கவிஞர் ஐயாத்துரை எழுதிய "எனது காவல் தனை மீறி வந்த நீ யார்?", "அடவிதனில் மிகத் திடமுடனே புகுந்த யாரோ நீ" ஆகிய இரு பாடல்களை முறையே காப்பியிலும் மோகனத்திலும் பாடியமை காட்சியின் உணர்ச்சிக்கும், அரிச்சந்திரனின் நடிப்பிற்கும் மெருகூட்டுவதாக இருந்தது.

— நவாலியூர் நடேசன்


**சிரித்திரு**

ஒருவர்:- என்ன யோசிக்கிறாய்?

மற்றவர்:- இல்லை... புத்தபெருமான் பிள்ளைப் பாசம் எல்லாத்தையும் துறந்தார், அரசியலைத் துறக்கிறதுக்கு. சிறீமாவோ அம்மையார் புத்திர பாசத்தைத் துறக்கிறார், அரசியலைக் கைப்பற்றுறதுக்கு.

இங்கே வெட்டுக

# சிரித்திரன் சிக்கல் III



பங்குபற்றுபவரின் பெயர்: ......

..................................

முகவரி: ..................................

..................................

..................................

வாசகர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

இங்கே வெட்டுக

அறிவுறுத்தல் (1) முடிவு திகதி:- 10 - 04 - 1993

(2) இரு ஒரு மைய வட்டங்கள் மேற்காட்டப்பட்டுள்ளன. வெளி வட்டத்தின் பரிதியிலுள்ள சதுரங்களில் இடப்படும் எண்களின் கூட்டுத்தொகை 156 ஆக இருத்தல் வேண்டும். அவ்வாறே உள் வட்டத்தின் பரிதியிலுள்ள சதுரங்களில் இடப்படும் எண்களின் கூட்டுத்தொகையும் 156 ஆக இருத்தல் வேண்டும்.

(3) வெளிவட்டத்தின் ஒவ்வொரு விட்டத்தின் வழியேயிருக்கும் ஐந்து சதுரங்களில் இடப்படும் எண்களின் கூட்டுதொகை 65 ஆகவும் இருத்தல் வேண்டும்.

(4) எண்களை 1 இலிருந்து தொடங்குக. ஓர் எண் ஒரு முறைமட்டுமே உபயோகிக்கப்படல் வேண்டும்.

ஆசிரியரின் விடையுடன் ஒத்த விடைக்கு முதலாம் பரிசு — 250 ரூபா வழங்கப்படும்.

இது தவிர சரியான விடைகளை எழுதியோரில் குலுக்கல் மூலம் தேர்வு பெற்றஐவருக்குத் தலா 50/-வழங்கப்படுகிறது.

விதிகள்:

(i) போட்டிப் பத்திரங்கள் முடிவுத் திகதிக்கு முன்போ அல்லது அன்றோ வந்து சேரத் தக்கதாக அனுப்பப்படல்வேண்டும். காலதாமதமாயின் நிராகரிக்கப்படும்.

(ii) போட்டிப் பத்திரங்கள் யாவும் சிரித்திரனில் பிரசுரிக்கப்பட்ட இதழிலேயே செய்யப் படல்வேண்டும் அவ்வாறில்லையேல் நிராகரிக்கப்படும்.

(iii) அனுப்பவேண்டிய முகவரி:- சிரித்திரன்
550, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.


**தபால் உறையின் இடது பக்கத்தின் மேல் மூலையில் "சிரித்திரன் சிக்கல் போட்டி III" எனக் குறிக்கப்படல் வேண்டும்.**

(iv) போட்டிப் பெறுபேறுகள் வெற்றிபெற்றவர்களுக்கு முடிவுத் திகதியிலிருந்து இரண்டு கிழமைக்குள் கடிதம் மூலம் தெரிவிக்கப்படும். அக் கடிதத்திலேயே பரிசில்கள் வழங்கும் திகதியும், நாளும் குறிக்கப்படும்.

(v) ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது, இது தொடர்பாகக் கடிதம் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ எதுவித தொடர்பும் அனுமதிக்கப்படமாட்டாது.
"வாசகர்களின் சிந்தனையைத் திட்டுவதே சிரித்திரனின் அபிலாஷை"

**சிரித்திரன் சிக்கலை விடுவிப்பவர்களுக்கான பரிசினை கிளிநொச்சி நியூ கலா ரேடேர்ஸ் ஸ்தாபனத்தினர் வழங்குவார்கள்.**


எல்லாரும் சவிதாஸ் பிடவையகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கினம். பிடவை வாங்கத் தவியாய் நிற்கினம் போல.



அணிந்து மகிழ்ந்திட
சேட்டிங், சூட்டிங்
உடுத்து உவகையுற
காஞ்சிபுரம் மற்றும் கூறை
அத்துடன்
மங்கையர் மனதை
பலவிதமான
ரெடிமேட் உடைகளினால்
புதுவிதமான
புத்தெழில் ஊட்ட
சகலவித சாரிகளின்
விற்பனை நிலையம்

# சவிதாஸ் பிடவையகம்

யாழ் வீதி, கிளிநொச்சி.

# சிரித்திரன் சிக்கல் - 11 இன் வெற்றிபெற்ற விடை

| | | | |
|---|---|---|---|
| 6 | 21 | 18 | 9 |
| 16 | 11 | 12 | 15 |
| 13 | 14 | 17 | 10 |
| 19 | 8 | 7 | 20 |

இம்முறை ஆசிரியரின் விடையை ஒத்ததாக 148 பேர் சரியான விடையை அனுப்பியிருந்தனர். அவர்களில் முதலாம் பரிசிற்குரிய பரிசான ரூபா 250 இனைப் பெறும் அதிஷ்டசாலி,

இ. மகேந்திரன் (அருள்)
பிரமந்தனாறு
M. O. குவாட்டஸ் முன்
விஸ்வமடு.

2ஆம் பரிசான ரூபா 150 இனைப் பெறும் அதிஸ்டசாலி,

அ. செபநேசன்
மானிப்பாய் பரிஷ் — தெ. ப. பொ.
உ. வி. கூ. சங்கம்,
மானிப்பாய்.

3 ஆம் பரிசான ரூபா 100 இனைப் பெறும் அதிஷ்டசாலி,

ஆ. தமிழ்மறவன்
ஏ 99
மாவீரர் பணிமனை,
வன்னி.

இவர்களுக்கான பரிசினைக் கரணவாய் மூத்த விநாயகர்கோவிலடி பிள்ளையார் அரிசி ஆலை ஸ்தாபனத்தினர் வழங்குகின்றார்கள். வாசகர்களின் ஆர்வத்தினைக் கருத்திற் கொண்டு மேலும் நான்கு அதிஷ்டசாலிகளுக்குச் ''சிரித்திரன்'' தலா ஐம்பது ரூபா பரிசினை வழங்குகின்றான்.

(1) இராசா - இன்பவதனா
வதனா - கைத்தொழிற்சாலை
இடைக்குறிச்சி,
வரணி.

(2) ம. சுகந்தன்
ஆண்டு 5
மே / பா. க. மகா கிருஷ்ணமூர்த்தி
இராமநாதன் கலட்டி
கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(3) செல்வி ஞானசீலி செல்லையா
உடுவில் மகளிர் கல்லூரி,
உடுவில்,
சுன்னாகம்.

(4) லோ. பகீரதி
40 / 1, கலைமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(5) இ. ஞா. கௌரி (செல்வி)
பிள்ளையார் கோவிலடி,
நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

சிரித்திரன் சிக்கல் I இல் பரிசிற்குரிய இருவரினது சரியான முகவரியை எமது விற்பனையாளர்களினால் கண்டுபிடிக்க முடியவில்லை.

(1) கை. யோகாம்பிகை
''கல்வளவு''
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

(2) செல்வி ம. மீனலோஜினி
C/o Dr, இ. மயில்வாகனம்
பறாளாய்வீதி,
சுழிபுரம்.

இவர்கள் எமது காரியாலயத்தில் தமக்குரிய பரிசினைப் பெற்றுக்கொள்ளலாம்.

போட்டிக்கான விடைகளை அனுப்புவோர் தங்கள் முகவரியைத் தெளிவாகவும் முழுமையாகவும் குறிப்பிட வேண்டுகிறோம்.

**சிரித்திரு**

ஒருவனுக்காக உலகம்
உலகுக்காக ஒருவன்.

பூமியில் நசுக்கப்பட்ட உண்மை மீண்டும் துளிர்விடும்.

தன்நம்பிக்கையுடைய சிலரின் வரலாறே சரித்திரம்.

நம்மை ஆண்மை படைத்த வீரர்களாக்கும் மதமே நமக்கு வேண்டும். நம்மை ஆண்மை படைத்த வீரர்களாக்கும் கல்வியே நமக்கு வேண்டும்.

# பின் சிரிப்பு

ஒருவர்:- பனிக் குளிருக்கு என்ன செய்யலாம்?

மற்றவர்:- நீதானே நல்லாயிருக்கிறவையளைப் பார்த்து எரிஞ்சு கொண்டிருக்கிற. உனக்கும் குளிருதா?

டாக்டர்:- நான் நல்ல மருந்து எழுதித் தந்தன். எப்படிக் கண்பார்வை மோசமானது?

நோயாளி:- உங்கட பிறிஸ்கிறிப்சனை வாசிச்சுக் கண் மோசமாய்ப் போய்ச்சு.

செல்லம்:- உவள் கனகம்மாவை எனக்கு விளங்குதில்லை.

மீனாட்சி:- ! ! ! !

செல்லம்:- சுமங்கலி பூசைக்குப் போற தென்றால் சரணவாதப் புருசனையும் இடித்து விழுத்தியிட்டுப் போய்விடுவாள்.

☆ தம்பி என்ன சோதனைமுடிவு?

❋ A, B, C எடுத்திருக்கிறன்.

☆ நெடுக A B C யோட நிற்கிறாய். எனக்கு A B C......X Y Z வரை தெரியும்.

பூசகர்:- இந்த வீடியோக் கடைக்காரர் மோட்சம்தான் போவினம்.

அடியார்:- ! ! ! ! !

பூசகர்:- சிவராத்திரி விழிப்புக்கு வீடியோ, கசட் கொடுத்து உதவினவை.

பெண் குதிரை:-
நீங்கள் ஏன் அந்த உத்தியோகத்தரைக் காலால அடிச்சனியள்?

ஆண் குதிரை:-
உவரால எங்கட இனத்துக்கு மரியாதை போச்சு. குதிரையோடி பாஸ் பண்ணினவர்.

குட்டிக் குரங்கு:- குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் குரங்கிலிருக்கும் ஒற்றுமை—மனிதனுக்குள் இல்லையே,

தாய்க் குரங்கு:- மனிதன் படித்துக் கெட்டுப் போனான்.

## எழில் கொஞ்சும், தரம் விஞ்சும் சேட்டிங்



மயிலாக, எழிலாக,
கலையழகு சிந்தும்
மங்கையர் மயங்கும்
மகத்தான
மனங்கவர்
ஸ்தாபனம்.

ரெடிமேற் சூட்டிங் உட்பட அனைத்து
அணி வகைகளுக்கும்,

# சுப்பிரமணியம் ஸ்ரோர்ஸ்

யாழ் வீதி, கிளிநொச்சி.

என்னப்பா மெலிஞ்சு கொண்டு போறாய். எம். எஸ். ரி. அரிசியள்ள
வாங்கிச் சாப்பிடன். நான் அங்கதான் வாங்கிறனான்
என்னைப் பார் எப்பிடி இருக்கிறன்.



தரமான

அரிசி வகைகளிலும்

தரமான தரங்கள்

- நாட்டரிசி
- புழுங்கலரிசி.
- தீட்டல் பச்சை.
- வெள்ளைப் பச்சை.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

மொத்த விற்பனையாளர்கள்

மற்றும்

மோட்டார்சயிக்கிள், சயிக்கிள் உயரிய

தரமுடைய உதிரிப்பாகங்களுக்கும்

நாடவேண்டிய, நன்மதிப்புப்பெற்ற களஞ்சியம்

# எம். எஸ். ரி.

# ரேடர்ஸ்

கிளிநொச்சி.

மாறன் பதிப்பகம், 664, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.